**விசாயிகளை காக்கும் சுய உதவிக் குழுக்கள்**



விவசாயிகள் மேம்பட பொருளாதாரத்தை சார்ந்தே செயல்பட முடிகிறது, இதிலும் முக்கியமாக பெண்கள். இவர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாக "பெண்கள் சுய உதவிக் குழுக்களும்" , " விவசாயிகள் சங்கமும்" விளங்குகிறது.தனிநபராக வேலை செய்யும் வகையைக்காட்டிலும், விவசாயிகளும் பெண்களும் இணைந்து செயல்பட்டால், உற்பத்தி திறன் பெருகுவதுடன், இலாபமும் தொடர்ந்து அதிகரிக்கும்.

**மானியம் - பெறுவது எப்படி ?**

விவசாயத்தில் பல பிரச்சனைகளுள்ள இக்காலகட்டத்தில் விவசாயிகள் ஒரு குழுவாக சேர்ந்து செயல்பட்டால் மானியம், கடனதவி மற்றும் தொழில் நெறி வழிகாட்டுதல் ஆகிய அனைத்தையும் பெறலாம் என்று முனைவர். பார்த்தசாரதி கூறுகிறார். மேலும் பயிர் தோல்வி மற்றும் பிற காரணங்களினால் எற்படும் மனவுளைச்சல் இருந்து மீண்டு வரவும் இக் குழுக்கள் உதவுகின்றதாகவும் கூறுனார். எடுத்துக்காட்டாக கோழிக்கோடு மாவட்டத்தில் கக்கயம் கிராமத்தில், விவசாய குடும்பத்தை சார்ந்த 20 பெண் விவசாயிகளால் செயல்படுகிறது ஒரு சுய உதவிக் குழு.பெரும் பாலான பெண்கள் குறைந்த படிப்பறிவு உள்ளவர்களாகவும், 3 முதல் 4 ஏக்கர் சொந்த நிலம் உடையவர்களாகவும் உள்ளனர். இதன் காரணமாக நிகழ்ச்சி ஒருங்கிணைப் பாளரான திரு. P.A.மேத்தியு மற்றும் IISR - ன் இந்திய நறுமனப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை விஞ்ஞானியான முனைவர். T.K. யாகோப் அவர்களும் தொடர்ந்து இவர்களை கவனித்து, காய்கறி சாகுபடி, மீன் வளர்ப்பு, பால் பதப்படுத்துதல், பயிர் பெருக்கம், பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மண்புழு தயாரித்தல், உயிரியல் âச்சி கொல்லி போன்றவற்றை தயாரிக்க வழிநடத்துகின்றனர். மேலும் இக்குழுவை சார்ந்த உறுப்பினர்களை வெற்றிகரமாக இயங்கும் நிறுவனங்களுக்கு சுற்றுலா அழைத்து சென்று, பல்வேறு விஷயங்களை தெரியப்படுத்துகின்றனர்.பல பிரச்சனைகளை கொண்டு இருக்கும் நாட்டின் விவசாய உற்பத்தியைக் காட்டிலும் தனி மனிதரின் போராட்டம் மேலோங்க முடியாது என்று முனைவர் பார்த்தசாரதி கூறுகிறார்.

**நிதி உதவி :**

இவர்கள் ஒரு குமுவாக சேர்ந்து செயல்பட்டால், இவர்களது கோரிக்கைகள் நிறைவேறும். இதுவரை, வங்கிகள் தனி நபர்க்கு கடனுதவி வழங்குவதை விட குழுக்களுக்கு அதிகமாகவும் வசதியாகவும் வழங்குகின்றனர். குழுக்கள் அமைப்பது மட்டும் பிரச்சனைகளுக்கு தீர்வாகாது. குழு உறுப்பினர்கள் சொந்தமாக தொழில் செய்ய தேவையான நிதியுதவியை குழுக்கள் ஏற்படுத்த வேண்டும்.இதற்கு முதலில் குழுக்கள் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்டு கடனுதவி பெற்று, பல்வேறு வருமானம் வரும் வழிகளில் இதை உபயோகப்படுத்த வேண்டும் என்று முனைவர் T.K. யாகோப் கூறுகிறார்.

**குறைந்த வட்டி :**

இக்குழுவின் ஒருங்கினைப்பாளரான திருமதி. டெய்சி பிரான்சிஸ் கூறுகையில் “எக்குழுவில் பலர் கடனுதவி பெற்றுள்ளதாகவும் தற்போது செய்து வரும் செயல்களின் மூலம் வரும் வருமானத்தை கொண்டு இக்கடன் தொகையை திரும்ப செலுத்திவிட்டதாகவும் கூறுகிறார்.மேலும் இப்போது ஒவ்வொரு நபரின் பங்கான, 5000 ரூபாய் முதல் 9000 ரூபாய் வரை சேமித்துள்ளனர். இதன் மூலம் எந்த ஒரு உறுப்பினரும் கடனாக ரூபாய் 30,000 வரை, குறைந்த வட்டி தொகையில் பெறலாம். ஒவ்வொருவரும் தாங்கள் தயாரித்த மண்புழு உரத்தை கொண்டு இயற்கை முறையில் காய்கறி சாகுபடி செய்து, தங்கள் தேவைகளை ர்த்தி செய்து கொள்கின்றனர். சுமார் 10 பெண்கள் கொண்டு குழு, 2 - 7 பசுக்களை கொண்டு பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் பால் கூட்டுறவு சங்கத்தில் தினமும் பால் விற்று நிகர லாபமாக 100 முதல் 140 ரூபாய் வரை ஒரு மாட்டில் இருந்து ஒரு நாளைக்கு பெறுகின்றனர்.மேலும், மாட்டுச் சாணத்தை விற்பதன் மூலம் சுமார் 2000 ரூபாய் முதல் 1400 ரூபாய் வரை வருமானம் பெறுகின்றனர். இதிலும் கூடுதலாக, சிலர் பசு கன்றுகளை விற்று 5000 முதல் 6000 வரை பெறுகின்றனர்.இதே போல் நான்கு பேர் கொண்ட குழு ஆடு வளர்க்கும் பகுதி ஒன்றை வைத்துள்ளனர். இங்கு 3 - 7 தெளிச்சேரி இன் ஆடுகளின் மூலம் 1000 ருபாய் முதல் 9000 ரூபாய் வரை ஒவ்வொரு வருடமும் பெறுகின்றனர். கூடுதலாக ஆட்டின் சாணத்தை கொண்டு 2400 - 5000 ருபாய் வரை வருட வருமானமாக அடைக்கின்றார்.

**உள்ėர் வளங்கள் :**

இக்குழுவின் உறுப்பினரான சைநபா கூறுகையில், ஒவ்வொரு ஆட்டுக்கும் மருத்துவச் செலவாக ஒரு வருடத்திற்கு 100 ரூபாய் செலவிடுவதாகும். மற்ற தீவனங்களுக்கு என்று எதுவும் செலவிடுவதில்லை என்றும் கூறுகிறார். ஏனெனில் தேவையான அனைத்து தீவனங்களும் அப்பகுதியிலேயே கிடைப்பதால் இதற்கென்று தனியாக செலவிடுவதில்லை.

ஒவ்வொரு குழுவும் முதலில் 280 கோழிக் குஞ்சுகளை கொண்ட கோழிப் பண்ணை ஒன்றை ஆரம்பித்தனர். இது அந்த வருடத்திலேயே 2000 கோழிகளாக பெருக்கின. இவ்வாறாக அப்பெண்கள் முட்டை விற்பனை உள்ėர் சந்தையில் இறைச்சி விற்பனை போன்று பலவகைகளில் இருந்து 11,000 ரூபாய் சம்பாதித்தனர். மேலும் இரண்டு பெண்கள் காட்சிக்காக வைக்கப்படும் மீன்களை வளர்த்து, அவற்றை விற்பனை செய்ததன் மூலம் 4800 ரூபாய் பெற்றனர்.

**தொடர்புக்கு :**
திரு. P.A.மேத்தியு
**தொலைபேசி** : 0496 - 2662372
***மின்னஞ்சல்*** : kvkcalicut @ sancharnet.in
***மற்றும்*** :
முனைவர் T.K. யாகோப்,
முதன்மை விஞ்ஞானி,
**அலைபேசி** : 0944753967
***மின்னஞ்சல்*** : Jacodtk @ spices.res.in